Paper ID: IC27

# "விவாகரத்து இடம் பெறுவதற்கான காரணங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் - களுத்துறை மாவட்ட முஸ்லிம்களை மையப்படுத்திய ஆய்வு"

**எம்.எம்.எப்.ஸம்ஹுா[1], எம்.ஐ.எம்.தாரிக்[2], எம்.டி.எப்.ருமானா[3]**

[1,2,3] அரபு மொழித்துறை,
இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மெழிப்பீடம்,தென்கிழக்கு பல்கலைக்கழகம்,ஒழுவில்,இலங்கை.
farzana.rasool5@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இன்று உலகில் மனிதனது வாழ்விலும் அவனது நடத்தையிலும் குடும்பம் சமூகம் என பல வகையிலும் விவாகரத்துக்களின் செல்வாக்கும், எதிர்மறை விளைவுகளும் அதிகமாகனதாகவே காணப்படுகின்றது. அதே போன்று விவாகத்திற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் எந்த அளவு முஸ்லிம் சமூகத்தில் அதிகரித்துள்ளதோ அதனை விட இரு மடங்கு விவாகரத்துக்கள் இன்று சமூகத்தில் அரங்கேறுகின்றன. இஸ்லாம் அனுமதித்து வெறுத்த ஒரு விடயம் விவாகரத்து இன்று அதிகரித்துச் செல்கினறன.ஒரு பக்கம் விவாகப்பதிவுகள் நடந்த வண்ணம் இருக்க அதில் இரு மடங்கு வீதங்கள் விவாகப்பிரிவுகள் சமூகத்தில் அரங்கேருகின்றன.சில பெண்களும் பிள்ளைகளும் அநாதரவாக்கப்பட்ட நிலமைகள் இன்று கண்கூடாகும்.இவ்வாய்வு களுத்துறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களை மையப்படுத்திய ஒரு ஆய்வாகும்.முஸ்லிம் சமூகத்தில் அதிகம் விவாகரத்துக்கள் இடம் பெறுவதற்காண காரணங்களை கண்டறிந்து அதன் மூலம் தனி மனிதன்; குடும்பம்இ சமூகம் எதிர்கொள்ளும் பாதிப்புக்களையும் கண்டறிய இவ்வாய்வு எத்தணிக்கின்றது. இவ்வாய்வுக்காக முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள் :** விவாகரத்துக்கள், முஸ்லிம்கள், எதிர்மறை விளைவுகள்.

## அறிமுகம்

திருமணத்தை வரவேற்கின்ற இஸ்லாம் விவாகரத்து எனும் மனமுறிவை அறவே வெறுக்கின்றது.எடுத்தோம் கவிழ்த்தோம் என்றில்லாமல் இஸ்லாம் எத்தகைய பிரச்சினை கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட போதும் முடியுமான வரை அக்குடும்பத்தை பிளவு படுத்தாமல் இருக்கும் அம்சங்களையே வலியுருத்துகின்றது. "இன்னும் கணவன் மனைவி இருவருக்குமிடையே பிளவு ஏற்பட்டு விடுமோ என நீங்கள் அஞ்சினால் அவரின் உறவினரிலிருந்து ஒரு நடுவரையும் அவளின் உறவினரிலிருந்து ஒரு நடுவரையும் நீங்கள் அவ்விருவரிடமும் அனுப்புங்கள்.நடுவர்களாகியவர்கள் கணவன் மனைவிக்கிடையே இணக்கத்தை உண்டாக்க நாடினால் இருவருடைய இணக்கத்துக்கு அல்லாஹ் உதவி செய்வான் "(4.35) இம்முயற்சிகள் வெற்றி காணாத போது கையாளப்படும் கடைசி பரிகாரமாகவே விவாகரத்து அமைந்து விடுகின்றது.ஆனால் இது இறைவனுக்கு ஒப்பான விடயம் அல்ல என்ற விடயத்தை நபி முஹம்மது (ஸல்)அவர்கள் இப்படிச் சொல்லிக்காட்டினார்கள்.:-"இறைவன் ஆகுமாக்கியவற்றில் அவனுக்கு மிக வெறுப்பானது தலாக் எனும் விவாகரத்தாகும்."(ஹதீஸ்) எனினும் வாழ்க்கையில் மோசமான கட்டங்களை சந்தித்து வாழ்நாள் முழுவதும் அவஸ்தை படாதிருக்க ஆணுக்கும் பெண்ணுக்குமாக விவாகரத்து கோரக்கூடிய 03 வழிமுறைகளை இஸ்லாமிய ஷரீஆ சட்டம் குறிப்பிட்டுள்ளது.

- தலாக்- ஆண் கோருவது
- குல்உ- பெண் கோருவது
- பஸ்ஹு - இருவருக்கும் பொதுவானது.

இந்த விடுதலை பெறப்பட்டாலும் இதில் அனேகமாக பாதிக்கப்பட்டவர்களாக பெண்களே காணப்படுகின்றார்கள். குருவி கூட தனக்கான ஒரு கூட்டை ஒரே நாளில் கட்டிக் கொள்வதில்லை.பல நாட்கள் போராடி தான் தனக்கான பாதுகாப்பான கூட்டை அமைத்துக் கொள்கின்றது.சில சமயம் குருவியே தான் கட்டிய கூட்டை அழித்து விட்டு பின்னர் அவதிப்படும்.அதுபோலத்தான் திருமண பந்தமும். சமீப காலமாக திருமணத்திற்கு பின்னர் மன முறிவு ஏற்பட்டு கணவன் மனைவி பந்தத்தை சிதைத்துக் கொள்ள நீதி மன்ற வாசலில் ஆண்டுக்கணக்கில் தவம் கிடக்கும் தம்பதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

**இலங்கையில் முஸலிம்களுக்கான விவாகரத்துச் சட்டம்**

ஒரு நாட்டின் மத,கலாசார,பிரதேச அடிப்படைகளில் வாழ்கின்ற தனித்துவமான குழுமங்களின் தனித்துவங்களை பேணும் வகையில் அவர்கள் பின்பற்றுகின்ற அவர்களுக்கே உரித்தான சட்டங்கள்,நடைமுறைகள்,வழக்காறுகள் அவர்களுககே உரித்தாக்கல் சட்டம் தனியார் சட்டம எனப்படும்.

இலங்கை தளனியார் சட்டங்கள் கண்டியச்சட்டம்இ தேச வழமைச்சட்டம்இ முஸ்லிம் தனியார் சட்டம் என 03 வகைப்படும்.

**முஸ்லிம் தளியார் சட்டம்.**

இது இரு பிரிவுகளை கெண்டதாகும்.

- ஆள் சார் சட்டம்(personal law)திருமணம்இ பலதார மணம்
- விவாகரத்து
- பராமரிப்பு
- பிரதி பலன்களை எதிர்ப்பார்க்காத கொடைகள்
- பருவமடைதல்
- தத்தெடுத்தல் அல்லது மகவேற்பு.
- பிள்ளைகளது பாதுகாப்பு.
- திருமணம் செய்ய தடுக்கப்பட்டோர்
- மகரும் கைக்கூலியும். ஆதனம் சார் சட்டம்(law of property)
- உயில் எழுதாத சொத்து வாரிசுரிமை.
- பிறப்பின் மூலம் வாரிசுரிமை.
- வாரிசின் வகை .
- வக்பு அல்லது நம்பிக்கை பொறுப்பு

இலங்கையில் முஸ்லிம்கள் சிறுபான்மையினர; சிதரலான குடியிருப்புக்களை கெண்டவர்களாவர்.கடந்த இரு தசாப்த காலமாக இலங்கை முஸ்லிம்கள் சமூகப்பரப்பில்

பல்வேறு வகையான நெருக்கடிகள்இ பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படுகின்றன.கல்வி, பொருளாதாரம்இ கலாசாரம், சமூகம்இ குடும்ப வாழ்வு என எல்லா முனைகளிளும் நெருக்கடிகள் தலைதூக்கி வருவதை அவதானிக்கலாம்.இந்தத் தொடரில் குடும்ப வழ்வின் சிதைவும், விவாக விடுதலை அதிகரிப்பும் இன்று எமது கவனத்தை ஈர்க்கும் அளவு விகாரமடைந்து வருகினறன.இத்தருணத்தில் பிரச்சினை குறித்த காரணங்களையும் அதற்கான தீர்வுகளையும் தேட வேண்டியுள்ளது. எனவே விவாகரத்து இடம் பெறுவதற்கான காரணங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் களுத்துறை மாவட்ட முஸ்லிமகளை மையப்படுத்திய ஆய்வு.என்பதனை பற்றி ஆராயும் இவ்வாய்வானது பின்வரும் 02 விடயங்களை கருத்<u>திற்கொள்ளவுள்ளது.அவையாவன,</u>

- முஸ்லிம்கள் மத்தியில் பாரிய காரணங்கள் இன்றி நிகழும் விவாகரத்துக்கள்.
- விவாகரத்துக்களால் பல கோணங்களில் ஏற்படும் பாதிப்புக்கள்.

இவ்வாய்வானது முஸ்லிம்கள் சிதறி வாழ்கின்ற குறிப்பாக சிங்கள மக்களுடன் கலந்து வாழ்கின்ற மாவட்டமான களுத்துறையை மையப்படுத்தியதாகும்.அந்த வகையில் களுத்துறை மாவட்டத்தில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட பேருவளை காதி நீதவான் நீதிமன்றை(பெரும்பான்மை களுத்துறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களை உள்வாங்கியது)மையமாக கொண்டு இந்த ஆய்வு மேர்கொள்ளப்பட்டது.உலகளாவிய ரீதியில் றேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளையும், காதி நீதிமன்றங்களை தரிசிப்பதனூடாகவும்இ காதி நீதவான்களுடனான நேர்காணல்களின் மூலமும் கருத்துக்கள் பெறப்பட்டன.

**<u>ஆய்வுப் பிரச்சினை</u>**

களுத்துறை வாழ் முஸ்லிம் மக்களிடம் அதிகரித்து வரும் விவாகரத்துக்களால் தனிமனித, குடும்பம், சமூகம் எதிர்நோக்கும் விளைவுகளையும், அதற்கான காரணங்களையும் அதற்குரிய தீர்வுகளையும் கண்டறிய வேண்டும்.

**<u>ஆய்வு நோக்கம்</u>**

முஸ்லிம்கள் மத்தியில் பெருகி வரும் விவாகரத்துக்கள் பற்றிய இவ்வாய்வின் நோக்கம் பிரதானமாக இரண்டாக வரையறுக்கப்பட்டுள்ளன.

- முஸ்லிம்கள் மத்தியில் அதிகரித்து வரும் விவாகரத்துக்களுக்கான காரணங்களை கண்டறிந்து அதற்குரிய தீர்வுகளை முன்வைத்தல்.
- விவாகரத்துக்களால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தல்.

**<u>ஆய்வின் கருதுகோள்</u>**

மேற்கூறப்பட்ட நோக்கங்கள் பின்வரும் கருதுகோள்கள் மூலம் பரீட்சிக்கப்பட்டன.

- விவாகரத்துக்களில் அதிகமானவை மூன்றாம் தரப்பின் தலையீட்டின் காரணமாக இடம்பெறுகின்றன.
- முஸ்லிம்கள் மத்தியில் அதிகரித்துள்ள விவாகரத்துக்களில் பெண்களால் கோரப்படுகின்ற (பஸ்கு) விவாகரத்துக்களே அதிகமாகும்.
- பிரச்சினைகளுக்கான உடனடி தீர்வாக விவாகரத்துக்களையே மக்கள் நாடுகின்றனர்.மக்கள் மாற்றுத்தீர்வுகளை காண விளைவதில்லை.

## ஆய்வு முறையியல்

ளுத்துறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் முஸ்லிம்கள் மத்தியில் பெருகி வரும் விவாகரத்துக்கள் குறித்த இவ்வாய்வானது பண்புசார் மற்றும் அளவுசார் முறைமைகளை பயன்படுத்திய விபரிப்பு ஆய்வாக இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.மேலும; இவ்வாய்வானது ஒரு கள ஆய்வாக இருப்பதனால் இவ்வாய்வினை நேர்த்தியாக பூரணப்படுத்தும் வகையில் முதலாம் நிலை தரவுகளும; இரண்டாம் நிலை தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.களுத்துறை மாவட்ட பெரும்பான்மை நீதிப் பிரதேசத்தை உள்வாங்கிய பேருவளை காதி நீதவான் நீதிமன்றத்தில் மனுத்தாக்கள் செய்யப்பட்ட கிட்டத்தட்ட 870 வழக்குகளில், எழுமாறாக 700வழக்குகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.அவற்றொடு 2013-2017ம் ஆண்ட வரையிலுமுள்ள 53 மாதங்களில் எழுமாறாக 13 மாதங்கள் தெரிது செய்யப்பட்டன.இம் முதலாம் நிலை தரவுகளை பெற்றுக்கொள்ள பேருவளை காதி நீதிபதியிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.இவ்வாய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத்திட்டத்தை நிறுவுவதற்காக விவாகரத்து சம்பந்தமான நூல்கள்இ இணையத்தள ஆக்கங்கள்இ பத்திரிகைகள்இ சஞ்சிகைகள் என்பன மூலம் இவ்வாய்வுக்கான இரண்டாம்அ நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஆய்வு பிரதெசம் - கலந்துரையாடலும் பெறுபேறுகளும்

### உலக மக்களிடையே விவாகரத்து

சேர்ந்து வாழும் குடும்ப விவாகரத்தை விடஇ திருமணம் செய்த குடும்ப விவாகரத்து 300% அதிகமாகும். பாலியல் திருப்தி இன்மையால் விவாகரத்து செயவோரின் நிலை,

| நாடுகள் | பிரான்ஸ் | கிரீஸ் | ஆயர்லாந்து | ஜேர்மனி | லுகஷ்மன்பேக் | ஸ்பைன் | இத்தாலி | இங்கிலாந்து | போர்த்துக்கள் | டென்மார்க் | பெல்ஜியம் | நெதர்லாந்து |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சதவீதம் | 31% | 22% | 21% | 20% | 20% | 18% | 18% | 18% | 17% | 17% | 16% | 13% |

உலகில் விவாகரத்து வீதம;

| வகை/ நாடு | பெல்ஜியம் | ஜேர்மனி | கிரீஸ் | பிரான்ஸ் | இத்தாலி | போர்த்துக்கள் | இங்கிலாந்து |
|---|---|---|---|---|---|---|---|
| 1970-1974 | 0.8% | 1.5% | 0.4% | 0.9% | 0.4% | 0.1% | 1.6% |
| 1995 | 3.5% | 2.1% | 1.1% | 2% | 0.5% | 1.2% | 2.9% |

10இ000 பேருக்கான விவாகரத்தை குறிப்பிடுகையில;

| நாடுகள் | ஸ்பைன் | ஜேர்மனி | பிரான்ஸ் | ஆஸ்திரியா | பேல்ஜியம் | பின்லாந்து | டேன்மார்க் | சுவீடன் | இங்கிலாந்து |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 8 | 18 | 20 | 21 | 21 | 24 | 24 | 25 | 30 |

பிரான்சில் நடக்கும் விவாகரத்துக்கள்,

| ஆண்டுகள் | மொத்த விவாகரத்துக்கள் | 1970ல் விவாகரத்து குறியீடுகள் 100 எனில் | 100 திருமணத்துக்கு: விவாகரத்துக்கள் | 1970ல் 100 எனில் சதவீத வளர்ச்சி |
|---|---|---|---|---|
| 1970 | 37,447 | 100 | 11.3 | 100 |
| 1975 | 54,306 | 145 | 16.0 | 141 |
| 1980 | 79,962 | 213 | 22.5 | 199 |
| 1985 | 1,05,962 | 283 | 30.0 | 265 |
| 1986 | 1,06,709 | 285 | 30.6 | 271 |
| 1987 | 1,04,497 | 280 | 30.5 | 270 |
| 1988 | 1,04,234 | 278 | 30.8 | 273 |

| ஆண்டு | 1989 | 1993 |
|---|---|---|
| மோத்த விவாகரத்துக்கள் | 1,03,600 | 1,09,200 |

பிரான்சில் சட்ட அமைப்பை நாடுவது யார் என்ற ஆய்வில;

| ஏதற்காக | விவாகரத்து | களவு | ஏமாற்றம் | சொத்துரிமை | வாங்குவது-விற்பது | புத்திரிகைக்கெதிராக | லேலைப்பிரச்சினை | மற்றவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| சதவீதம் | 28% | - | 11% | 11% | 10% | 9% | 8% | 23% |

1990 இல் மத்தியதர வர்க்கத்துக்கு மேற்பட்ட பிரிவுகளிடம் அதாவது 3000 ரூபாய்க்கு அதிகமான வருமானம் உடைய 20-35 வயதிற்கு இடைப்பட்டோரிடம் திருமணத்தில் நெருக்கடி என்றால் என்ன செய்வீர்கள்? என இந்தியா **டுடே மார்க்** நடத்திய ஆய்வு, **(21.12.1996)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பதில் | பேசி சமரசம் | விதியை நொந்து பிரச்சினையை மறப்பது | ஆலோசனை | விவாகரத்து | பிரிவு |
| சதவீதம் | 53% | 20% | 11% | 8% | 8% |

மேற்கில் நிகழும் திருமணங்களில் விவாகரத்து என்பது 03 திருமணங்களில் ஒரு திருமணமும்இ இந்தியாவில் 10 திருமணத்திற்கு ஒரு திருமணமும் விவாகரத்தைச் சந்திக்கின்றன.

**இலங்கை மக்களிடையே விவாகரத்து**

''பொதுவாக குடும்ப கட்டமைப்பு சிதைந்து, கணவன் மனைவி ஆகிய இருவரும் உள ரீதியில் விவாகரத்து பெற்றதன்(psychological devorse) பின்னரே நீதி மன்றங்களை நாடி வெளிப்படையான விவாகரத்துக்களுக்கு வருகின்றனர்'' என 2013ம் ஆண்டில் கனடாவை தளமாக கொண்டு இயங்கும focus எனும் நிறுவனத்தின் இலங்கை கிளை செய்த ஆய்வில் குறிப்பிட்டப்பட்டுள்ளது. தற்காலத்தில், இலங்கையில் விவாகரத்து இடம்பெறும் அளவு அதிகம் எனவும,திருமணமான மொத்த பெண்களின் தொகையில் 25% ஆனோர் விவாகரத்து பெற்றவர்கள் எனவும் கொழும்பு பல்கலைக்கழக வெகுஜன ஊடக கற்கை பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது திருமணம் குறித்து மக்கள் தொடர்பாட்ல் சார் அவதானமொன்றை பெற திருமணமான பெண்களை மாத்திரம் கவனத்தில் எடுத்து இவ்வாய்வானது அப்பல்கலைக்கழக இரண்டாம் மூன்றாம் வருட மாணவர்களின் உதவியுடன் பலகலைக்கழக வெகுஜன ஊடக கற்கைப்பிரிவு பேராசிரியை அஜந்தா ஹபு ஆரச்சி மற்றும் ஆய்வு உதவியாளர் கிரிசான சிரிவர்தன ஆகியோர் இணைந்து வடக்கு, கிழக்கு தவிர்நத ஏனைய 14 நகரங்களை உள்ளடக்கி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டள்ளது.இவ்வாய்வின் மூலம் அதிகபடியான விவாகரத்து இடம் பெறும் நகரமாக கெழும்பு 57%ஆக அடையாளம் காணப்பட்டுள்ளது.கம்பஹா, இரத்தினப்புரி, காலி ஆகிய நகரங்களில் அதிக வீதமும் ஹம்மாந்தோட்டை, மெணராகலை ஆகிய நகரங்களில் அதி குறைந்த வீதமும் விவாகரத்து நிகளும் நகரங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.இதில் 58% காதல் திருமணம் முடித்தவர்கள், 42% ஆனோர் பேச்சுவார்த்தையின் பின் நிச்சயித்து திருமணம் முடித்தவர்களாகும்.திருமணம் செய்து கெள்பவர்களிடையில் காணப்படும் புரிந்துணர்வின்மை காரணமாக இலங்கையில் தினமும் 300 பேர விவாகரத்து செய்து கொள்கின்றனர்.3892 பேர் 18 வயதுக்கும் குறைந்த வயதில் தாய்மை அடைகின்றனர்.(ஆய்வு - அனுஷா கோகுல பர்ணான்டோஇ பணிப்பாளர்இ மேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களம்)

**இலங்கையில் நாளாந்தம் அதிகரித்து வரும் விவாகரத்துக்கான காரணங்கள;**

[iii]சைத்தூன் கிஸ்ஸா- தொடக்க பகுதி (காப்பு)

[ளை]சைத்தூன் கிஸ்ஸா- தொடக்க பகுதி (கடவுள் வாழ்த்து)

[ளைை]சைத்தூன் கிஸ்ஸா – முஹம்மது ஹனிபு வேட்டைக்குப் போகுதல்.

[ளஎ]சைத்தூன் கிஸ்ஸா – முஹம்மது ஹனிபு வேட்டைக்குப் போகுதல்.

[எ]சைத்தூன் கிஸ்ஸா - முஹம்மது ஹனிபு இறமுக்குப் போகுதல்

[எை]சைத்தூன் கிஸ்ஸா – முஹம்மது ஹனிபு வேட்டைக்குப் போகுதல்.

[எைை]சைத்தூன் கிஸ்ஸா – சைத்தூன் மதீனம்போகத் துணிதல்

[எைைை]ஸையத் ஹஸன் மௌலானா,எஸ்.ஏ., (1968) ‘‘இஸ்லாமியச் சொற்பொழிவுகள்’’, கொழும்பு்அரசு வெளியீடு. பக்-41.

[ளஒ]சைத்தூன் கிஸ்ஸா – முஹம்மது ஹனிபு வேட்டைக்குப் போகுதல்.

[ஒ]உவைஸ்,ம.மு., (1976) ‘‘இஸ்லாமும் தமிழும்’’, சென்னை் உலகத் தமிழாராட்சி நிறுவகம். பக்-78.

- மூன்றாம் நபர் தலையீடு
- சமவயது திருமணங்கள்
- சீதனம்
- வயது வேறுபாடு
- இளவயது திருமணம்
- அந்தஸ்து வேறுபாடு
- வாழத்தெரியாமை
- கல்வித்தகுதி வேறுபாடு
- சொத்துப்பிரச்சினை
- வெளிநாட்டு வேளை வாய்ப்பு
- கள்ளத்தொடர்பு
- வசதியின்மை
- ஏற்றத்தாழ்வு
- உளவியல் தாக்கங்கள
- சந்தேகம்
- உழைப்பினமை
- கணவனின் தொல்லைகள்
- கடன் சுமை
- பொறுப்பற்ற கணவன்
- ஏமாற்றுத்திருமணங்கள்
- காதல் திருமணங்கள்
- துாம்பத்திய உறவில் குறை
- மதமாற்றுத் திருமணங்கள்
- குடும்பப்புறக்கணிப்பு
- விட்டுக்கொடுக்காமை
- பாலியல் குறைபாடுகள்
- குறைபாடுள்ள பிள்ளைகள்
- குழந்தை பேரினமை
- துகாத நடத்தை
- நவீன தொலை தொடர்பு சாதனங்கள்
- திடீரென செல்வம் கூடல்
- மார்க்க விளக்கமின்மை
- முறையற்ற பிள்ளை வளர்ப்பு
- போதைப்பொருள் பாவனை
- மருமணங்கள்
- சமூகத்தின் பங்களிப்பிகன்மை
- ஆடம்பர மோகம்
- சுத்தமின்மை
- மாறிவரும் வாழ்க்கைச்சூழல்
- குடும்ப பிரச்சிகைளை மனம் விட்டு பேசிக்கொள்ளும் தன்மை இல்லாமை

**களுத்துறை மாவட்டத்தில் நாளாந்தம் அதிகரித்து வரும் விவாகரத்துக்கான காரணங்கள்,**

- மனைவியின் குணங்கள் பிடிக்காமலிருத்தல்.
- மனைவி அழகற்றவளாக இருத்தல்.
- மனைவி கணவனுக்கு கீழ்படியாமலிருத்தல்.
- மனைவி அடங்காப்பிடாரியாக இருத்தல்.
- எப்பொழுது பார்த்தாலும் தொண தொணவென்று கணவனை பேசிக்கொண்டிருத்தல்.
- கணவனை அடிக்கடி குறைக்கூறி கொண்டிருத்தல்.
- கணவனை கேவலப்படுத்தல்.
- கணவனை அலட்சியம் செய்தல்.
- மாமியாருடன் அடிக்கடி சண்டையிட்டு கொண்டேயிருத்தல்.
- பேற்றோர்களை விட்டு தனிக்குடித்தனம் செல்ல கணவனிடம் அடம் பிடித்துக்கொண்டிருத்தல்.

- கணவனின் உறவினர்களை, நண்பர்களை, விருந்தினர்களை கவனியாது அலட்சியமாக இருத்தல்.
- மற்றவர்கள் முன்பு கணவனைத்தாழ்வாக பேசுதல்.
- ஏதாவதொரு சின்னச்சின்ன காரணங்கணளுக்கெல்லாம் சண்டையிடுதல், அடம்பிடித்தல்.
- உடலுறவில் விருப்பமில்லாதிருத்தல்.
- கணவன் உடலுறவு கொள்ள அழைக்கும்பொழுதெல்லாம் மறுத்தல்.
- பெண்மை குறைவு கொண்டவளாக இருத்தல்.
- எப்பொழுது பார்த்தலும் அசிங்கமாகவே காட்சியளித்தல்.
- வரதட்ச்சனை, தானம் ஆகியவற்றில் பேச்சு வார்த்தை முறிதல்.
- கொடுக்கல், வாங்களில் குறைவுபட்டு விடுதல்.
- கணவனுக்கு தருவதாக வாக்களித்த சொத்துக்கள், பொருட்கள் கெடாதிருத்தல் அல்லது கொடுக்காது ஏமாற்ற நினைத்தல்.
- மாப்பிள்ளையை மாமனார் இழிவுபடுத்தல், மரியாதை கெடாது இருத்தல், அலட்சியம் செய்தல் , எடுத்தெரிந்து பேசுதல்.
- கணவனுடைய அனுமதியின்றி மனைவி தாயில்லம் சென்றுவிடுதல்.
- திருடுவது
- குடும்ப கௌரவம் இழக்கும்படி கேவலமாக நடப்பது.
- அடிக்கடி தொடர்ந்து பெற்றோர் வீட்டிலேயே இருத்தல்.
- கணவனுடைய அனுமதியில்லாமலேயே வெளியே செல்லுதல்.
- அனுமதியின்றி தனியாக ஓர் இரவு வெளியே தற்கியிருத்தல்.
- அன்னிய ஆடவருடன் வீட்டில் கணவன் இல்லாத வேலையில் தனித்திருத்தல்.
- அன்னிய ஆடவருடன் நெருங்கிப்பழகுதல்.
- கணவனுக்கு பிடிக்காத நபர்களைவ வீட்டினுள் அழைத்து இருக்க வைத்த தனியாக பேசுதல்.
- கணவனின் உற்றார் உறவினர்களை பேசுதல்.
- கணவனின் உற்றார் உறவினர்களைப் பகைப்பதும்.
- கணவனின் சகோதர சகோதரிகளை நிந்திப்பது.
- கணவனை அடிக்கடி சபிப்பது.
- கணவனை எப்பொழுது பார்த்தாலும் அது வேண்டும் இது வேண்டும் என்று நச்சரிப்பது.
- கணவனை எட்டி உதைக்கவோ, திருப்பி அடிப்பது போன்றே நடந்துகொள்வது.
- கணவனை எதிர்த்து நிற்பது, பேசுவது
- கணவனிடம் சவால் விடுவது சப்தமிடுவது.
- மது அருந்தவது.
- பொய் பேசுவது உண்மையை மறைப்பது
- எதிர்பார்ப்பு

- கணவன், மனைவியின் ஆசைகளை தேவைகளை புரிந்து கொள்ளமாட்டார்
- கணவனும் மனைவியும் திருமணம் ஆவதற்கு முன்பு பிறந்து வளர்ந்து வாழ்ந்த சூழ்நிலைகள் வெவ்வேறாக இருக்கும்.
- வாழ்க்கையில் வெறுப்பு, அலுப்பு
- புரிந்து நடந்து கொள்ளும் தன்மை இன்மை
- கணவனும் மனைவியும் நேர் எதிரான எண்ணங்கள், பழக்கவழக்கங்கள் உடையவர்களாக இருப்பார்கள்.

| ஆண்டுகள்/ மாதங்கள் | | மாதாந்தம் மனுத்தாக்கள் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | | | | | | மாதாந்தம் தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தலாக் | பஸ்கு | மனைவி தாபரிப்பு | பிள்ளை தாபரிப்பு | இதர வழக்குகள் | மொத்தம் | தலாக் | பஸ்கு | மனைவி தாபரிப்பு | பிள்ளை தாபரிப்பு | இதர வழக்குகள் | மொத்தம் |
| 2013 | Aug | 10 | 14 | 02 | 01 | 01 | 26 | - | - | - | - | - | - |
| | Oct | 13 | 21 | 05 | 02 | 06 | 47 | - | 04 | - | - | 01 | 05 |
| | Nov | 10 | 18 | 04 | 01 | 02 | 35 | 01 | 01 | - | - | 01 | 03 |
| | Dec | 16 | 17 | 09 | 16 | 01 | 59 | 04 | - | - | - | 01 | 05 |

| 2017 | 2016 | | | 2014 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Jan | Dec | Nov | Oct | Nov | Mar | Feb | Jan |
| 10 | 06 | 08 | 09 | 13 | 17 | 18 | 14 |
| 20 | 21 | 22 | 22 | 22 | 25 | 24 | 20 |
| 05 | 04 | 04 | 03 | 05 | 08 | 11 | 10 |
| 12 | 13 | 08 | 08 | 02 | 02 | 17 | 18 |
| 06 | 10 | 14 | 15 | 06 | 03 | 03 | 02 |
| 54 | 56 | 59 | 60 | 48 | 75 | 73 | 64 |
| 02 | - | 02 | 02 | - | 04 | 04 | 02 |
| 16 | 04 | 05 | 03 | 07 | 03 | 01 | 01 |
| 02 | 02 | 01 | 01 | 01 | 01 | 03 | - |
| 06 | 04 | 02 | 04 | - | 03 | - | 01 |
| 06 | 06 | 06 | 03 | 06 | 01 | 05 | 01 |
| 33 | 18 | 19 | 13 | 14 | 14 | 13 | 05 |

**விவாகரத்துக்களால் பாதிப்புக்கள்.**

விவாகரத்துக்களால் பல பாதிப்புக்கள் இடம்பெறுகின்றன. அவற்றை பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்தி பார்க்கலாம்.

1. தனிமனித பாதிப்புக்கள் ஆண், பெண், குழந்தைகள் மற்றும் உடல், உள ரீதியானது.
2. குடும்ப பாதிப்புக்கள்
3. சமூக பாதிப்புக்கள்

1. தனிமனித பாதிப்புக்கள்

உள ரீதியானது.

- ❖ பாதகமானது
- குற்ற உணர்வு
- பதற்றமான நிலை
- தனிமை உணர்வு
- மகிழ்ச்சியற்ற தன்மை
- மன வலி
- மன உளைச்சல்களுக்கு உள்ளாதல்
- நம்பிக்கை இழத்தல்

- ❖ சாதகமானது
- சுதந்திர உணர்ச்சி
- தனது வாழ்க்கை தொடர்பான தீர்மானங்களையும் கட்டுப்பாடுகளையும் தானே செயற்படுத்தக்கூடிய தன்மை.
- ஆளுமை விருத்தி

2.குடும்ப பாதிப்புக்கள்

- ➢ சுயமரியாதை பாதிக்கப்படல்.
- ➢ உறவுகள் துண்டிக்கப்படல்.
- ➢ பிள்ளைகள் பிச்சைக்காரர்களாக மாற்றப்படல்.
- ➢ சமூகத்தின் பலிச்சொல்லுக்கு ஆளாகுதல்.
- ➢ பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படல்.
- ➢ களவு, கொள்ளை போனறவற்றில் ஈடுபடல்.
- ➢ தந்தை பெயர் தெரியாத பிள்ளைகள் உருவாகுதல்
- ➢ பாதுகாப்பின்மை
- ➢ குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படல்.
- ➢ குழந்தைகள் தான்தோன்றித்தனமாக நடத்தல்.
- ➢ சமூகத்தை விட்டு ஒதுக்கப்படல்.
- ➢ வருமானமற்ற தன்மை
- ➢ பாடசாலைகளில் இருந்து இடைவிலகுதல்

1. சமூக பாதிப்புக்கள்

- ➢ தற்கொலை அதிகரிப்பு
- ➢ மனிதர்களை கொலைக்காரர்களாக மாற்றுகிறது
- ➢ கலாச்சார சீர்கேடுகள்
- ➢ போதை வஸ்துக்களின் அதிகரிப்பு
- ➢ நோய்களின் அதிகரிப்பு (எயிட்ஸ், கனேரியா, சிபிலிஸ், மாரடைப்பு)
- ➢ விபச்சாரம் அதிகரிப்பு
- ➢ பாலியல் துஸ்பிரயோகம் அதிகரிப்பு
- ➢ ஆரோக்கியமற்ற சமூகம் ஒன்றை உருவாக்குதல்
- ➢ சமூக கௌரவம், அந்தஸ்து பாதிக்கப்படல்.

## விதந்துரைப்புக்களும் முடிவுரையும்

எதிர்மறை எண்ணங்கள் கொண்ட குழந்தைகள் உள்ள சமுதாயம் ஆரோக்கியமானதாக இருக்க வாய்ப்பில்லை. விவாகரத்து பெற்றால் உறவு மதிக்காதே என்ற பயம் முன்பு இருந்தது. அவசரப்பட்டு விவாகரத்து பெறுவோர், இன்னொரு வாழ்வை அமைத்து கொண்டாலும், வெற்றிகரமாக ஒரு சிலரால் மட்டுமே முடிகிறது. இயலாத சிலர், வாழ்வு அதன் போக்கில் போகிறது மனஉறுதியுடன் இருப்போர் மட்டுமே லட்சியத்துடன் முறைப்படி வாழ்வை கொண்டு செல்கின்றனர். குழந்தைகளின் நலன் கருதியாவது விவாகரத்தற்ற இனிய குடும்பங்கள் சேர்ந்த சமூகம் அமைப்போம் என ஒவ்வொரு பெற்றோரும் எண்ணினால் நிச்சயம் நடக்கும். இவ்வாய்வானது பல முடிவுகளை முன் வைத்திருக்கின்றது. உண்மையில் எமது முஸ்லிம் சமுதாயத்தில் விவாகச்சிறப்புக்கள் மறைக்கப்பட்டு விவாகரத்து செயற்பாடுகள் தான் குவிந்த வண்ணமுள்ளன. பல காதி நீதிமன்றங்கள் வாயிலாக எத்தனை பேரை வாழ வைத்திருக்கின்றன? வாழ வைக்கின்றன? என்பதை உணர முடியும். சிங்கள பெரும்பான்மை கொண்ட இந்த நாட்டில் இஸ்லாமிய ஷரீஆ சட்டம் பேண முஸ்லிம் தனியார் சட்டம் என்ற ஒன்றின் மூலம் சட்ட வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்தி இருப்பது ஒரு வரப்பிரசாதமாகும். இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் விவாகரத்து குறித்த விதிகளை பற்றிய முறையான தெளிவின்மை காரணமாக மக்கள் எடுத்த எடுப்பிலேயே காதி நீதிமன்றங்களில் மனுத்தாக்கள் செய்கின்றனர். வழக்குடன் தொடர்புபடும் நபர்கள் சட்டத்தினை மீறி நடக்கின்ற போது அதற்குரிய முறையான நடவடிக்கைகள் மேற்கொள்வதில் கால தாமதம் ஏற்படுகின்றன. இவ்வாறாக விவாகரத்து முறைகளுக்கான அதிக காரணமாக பெண்கள் விளங்கிய போதிலும் பெண்களும் பிள்ளைகளுமே அதிகம் பாதிப்புக்குள்ளாகின்றனர். எனவே, இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்ட காரணங்கள் மீள் பரிசீலிக்கப்பட்டு, பாதிப்புக்கள் குறைக்கப்படல் வேண்டும். அதன்படி குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் காதி நீதவான், கல்விமான்கள; மற்றும் உலமாக்கள் போன்றோரை சந்தித்து நேர்கண்டு கலந்துரையாடியதன் மூலம் பெறப்பட்ட தகவலின் படி இத்தகைய விவாகரத்துக்கள் முஸ்லிம் சமூகத்தில் அதிகம் இடம்பெறுகின்றமை கவலை தருவதாகவும; விவாகரத்து செயது கொண்டோரின் குடும்பத்திலும் சமூகத்திலும் இப்பிரச்சினை பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் நேர்காணல் மூலம் அறியப்பட்ட தகவலாகும். எனவே பின்வரும் விதந்துரைப்புக்கள் விவாகரத்து செயற்பாடுகளை இப்பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் குறைப்பதற்கும; எனைய முஸ்லிம்களுக்கு விழிப்புணர்வ ஏற்படுத்துவதற்கும் துணையாக அமையும்.அதன்படி இவ்வாய்வின் முடிவுகள் பின்வரும் விதந்துரைப்புக்களை முன்வைக்கின்றது.

1. விவாகரத்து பற்றிய இஸ்லாமிய நோக்கினை குறிப்பிட்ட பிரதேசத்திற்கு ஆழமாக தெளிவு படுத்தல்.
2. இஸ்லாம் பற்றிய போதிய அறிவினை பிரசே முஸ்லிம்களுக்கு வழங்கள்.
3. விவாகரத்தால் ஏற்படும் இம்மைஇ மறுமை வாழ்வு பற்றி தெளிவு படுத்தல்.
4. குடும்ப சமூக மட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு எல்லாம் விவாகரத்து ஒரு தீர்வாக அமையாது என்பதனையும் அதனால் விவாகரத்த பெரும்பாலும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும்கத்து
   சுமூகத்துக்கு எடுத்துக்காட்டும் முயற்சிகளில் மார்க்க தலைவர்களும்இ சமூகத்தலைவர்களும் ஈடுபடதல் வேண்டும்.
5. இப்பிரச்சினைக்கு தூண்டக்கூடிய சீதனம் போன்ற காரணங்களை சமூகம் பொறுப்பேற்று அவற்றை களைய ஆவண செய்தல் வேண்டும்.

முடிவாக பார்க்கும்போது களுத்துறை மாவட்ட முஸ்லிம் மக்களிடையே விவாகரத்து சம்பவஙகள் சாதாரணமாக நடைபெற்று வருவதனையும், குடும்பம் மற்றும் சமூகம் இதில் அதிகம் செல்வாக்கு செலுத்தியிருப்பதனையும் அதற்கு மார்க்கம் பற்றிய போதிய அறிவின்மையும்இ விவாகரத்தினை மக்கள் பிரச்சினைகளுக்கான முதலும் இறுதியுமான தீர்வாக கருதுவதும, அது ஏற்படுத்தும் விளைவுகள் பற்றி சிந்திக்காமையும் இதற்கு அடிப்பிடையாக அமைந்துள்ளன என்பதனை இவ்வாய்வின் முடிவுகள் வெளிப்படுத்துகினறன.எதிர்காலத்திலும் இவ்வாறான நிகழ்வுகள் இடம் பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் இருப்பதனால் அதனை கருத்திற்கொண்டு இத்தகைய விவாகரத்து முயற்சிகளை தடுப்பதற்கான விதந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

**ஊசாத்துணைகள்**


- Safanagul begam, (2015),is equal justice possible a review of srilanka’s muslim marriage and devorse act and its implementation,Colombo: Islamic womens association for research and empowerment
- பேளஸுல்இ எம்.பி., 2015இ இலங்கை முஸ்லிம்களிடையே பெறுகியுள்ள விவாகரத்தும;, சமூகக்கட்டமைப்பில் அதன் தாக்கங்களும்இ உண்மை உதயம், பரகஹதெனிய: ஜம்மியதுல் அன்ஸாரிஸ் ஸன்னதுல் முஹம்மதியா
- ஹஸனா, சே.இ, 2015, இஸ்லாமிய நோக்கில் பால்நிலை சமத்துவம் மற்றும் சம நீதி முஸ்லிம் விவாகம், விவாகரத்துச்சட்டமும் இஸ்லாமியச்சட்டமும், கொழும்பு: இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம்
- காதி நீதிமன்றம், 2013-2017க்கான மாதாந்த அறிக்கைகள், பேருவளை
- பவாஸ் ரௌஸ்தீன், முஸ்லிம்கள் மத்தியில் அதிகரித்து வரும் விவாகரத்து காரணக்கள் விளைவுகள் பற்றிய ஓர் எடுத்துரைப்பு, www.google.com
- இலங்கை விவாகரத்துச்சட்டம, திருமணத்தீர்வுகள;, www.thazal.com
- இலங்கையில் தினமும் 300 பேர் விவாகரத்து, 23-09-2011, www.old.globaltamilnews.com
- ஆதிகபடியான விவாகரத்து இடம் பெறும் நகரமான கொழும்பு, newmuthur,Thursday,07-03-2013, www.newmuthur.com
- முஸ்லிம் தனியார் சட்டம் (muslim personal law), 30-11-2011, www.groups.google.com